DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, MAYILADUTHURAI

CASE NO. CC. 11/2022

Deposition of LW7 Examined as PW7 Date :30.12.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dr.ரவீந்திரன் | Caste | : | |
| Father's Name | : | சேகர் | Calling | : | உதவி மருத்துவர் மயிலாடுதுறை GH |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 36/2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.12.2024**

**A1 ,A2 present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.08.2021 ம் தேதியன்று இரவு 11.00 மணியளவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அவரச பிரிவில் பணியில் இருந்த போது விஜயகுமார் என்பவரை அவரது தகப்பனார் கண்ணாயிரம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் மருத்துவமனைக்கு வந்த போது சுயநினைவுடன் வந்தார். அவரை நான் விசாரித்த போது அன்றைய தினம் மாலை 6.00 மணியளவில் தனது வீட்டருகே அடையாளம் தெரிந்த 2 நபர்கள் தன்னை அரிவளால் தாக்கியதாக தகவல் கூறினார். அவரை நான் பரிசோதனை செய்த போது இடது கை நடுவிரலில் வெட்டுகாயம் ஏற்பட்டு விரல் தொங்கிகொண்டு இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து விபத்து பதிவேட்டினை பதிவு செய்து சிகிச்சை அளித்தேன். அதன் பிறகு மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவ கல்லூர் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தேன். அங்கு மருத்துவர் அங்கதகுமார் சிகிச்சை அளித்துள்ளார். அதில் காயம் பட்ட விஜயகுமாருக்கு எலும்பு உடைந்துள்ளதால் கொடுங்காயம் என்று அவர் கொடுத்த சான்றிதழின் அடிப்படையில் நான் கொடுங்காயம் என்று சான்று அளித்து உள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று நான் கொடுத்ததுதான். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ .சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருவாரூர் மருத்துவர் பதிவு செய்த விபத்து பதிவேடு அ .சா.ஆ.5 மற்றும் காயச்சான்று அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சிகிச்சைக்காக காயம் பட்ட நபர் 5 மணி நேரம் கால தாமதாமாக வந்துள்ளார் என்றால் சரிதான். காலதாமதமாக சிகிச்சைக்கு வந்ததற்கு காரணம் ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த 2 நபர்களின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அரிவாளின் வகைகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக கொடுங்காம் என்று சான்று வழங்கியதற்கு எக்ஸ்ரே எதுவும் உங்களிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் உங்களை விசாரிக்கும் போது ஆயுதத்தை காட்டி கருத்துரை கேட்கவில்லை என்றால் சரிதான். சாதரணமாக அந்த காயம் மரம் ஏறி சுத்தம் செய்யும் போதும் இளநீர் வெட்டும் போதும் தவறுதலாக வெட்டிக்கொண்டால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் வாய்ப்பு உள்ளது.

30/12/24